வகுப்பு : 11

akwaacademy.blogspot.com

தேர்வு எண் | 1 | 1 | B | 2 | 0 |

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் :

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ள அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படு வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைக வேண்டும்.

### பகுதி – I

குறிப்பு: அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலின் ஆசிரியர் ------
   அ) நம்மாழ்வார்   ஆ) ஆர். எஸ். நாராயணன்
   இ) மசானபு ஃபுகோகா   ஈ) பாமயன்

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. வெள்ளிவீதியார் | – | அ. | புறநானூறு |
| 2. அண்ணாமலையார் | – | ஆ. | சி.சு. செல்லப்பா |
| 3. வாடிவாசல் | – | இ. | குறுந்தொகை |
| 4. இளம்பெருவழுதி | – | ஈ. | காவடிச்சிந்து |

   அ) அ, ஆ, இ, ஈ   ஆ) ஆ, ஈ, அ, இ   இ) இ, ஈ, ஆ, அ   ஈ) இ, ஈ, அ, ஆ

3. நிழல் போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை -----
   அ) வினை   ஆ) பயன்   இ) வடிவம்   ஈ) உரு

4. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை -----
   அ) 9   ஆ) 3   இ) 27   ஈ) 13

5. "தென்னிந்திய அரசியல் சாணக்கியன்" என்று போற்றப்பட்டவர் ------
   அ) சாமுவேல்   ஆ) ஆனந்தரங்கர்   இ) குருவப்பிள்ளை   ஈ) துய்ப்ளே

6. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ----
   அ) சாழல்   ஆ) சிற்றில்   இ) சிறுதேர்   ஈ) சிறுபறை

7. அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் – யார் யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம்   ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) மன்னர் அமுதவல்லியிடம்   ஈ) அமைச்சர் மன்னரிடம்

8. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ------
   அ) இரகசிய வழி   ஆ) மனோன்மணீயம்
   இ) நூல்தொகை விளக்கம்   ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

9. Smartphone என்பதன் தமிழ்க்கலைச் சொல் -------
   அ) செல்லிடப்பேசி   ஆ) திறன்பேசி   இ) தொலைப்பேசி   ஈ) தொடுதிரை

10. 'வளைஇ', 'அலைகடல்' ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு -----
   அ) வினைத்தொகை, சொல்லிசையளபெடை   ஆ) இன்னிசையளபெடை, பண்புத்தொகை
   இ) சொல்லிசையளபெடை, வினைத்தொகை   ஈ) செய்யுளிசையளபெடை, வினைத்தொகை

www.Padasalai.Net

Scanned with CamScanner

11. பாதுகாப்பற்ற படகு போன்றது ------
அ) மறதியுடன் வாழ்வது
ஆ) கண்ணோட்டமின்றி வாழ்தல்
இ) இரந்து வாழ்தல்
ஈ) பகையோடு வாழ்தல்

12. "வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்" என்று கூறியவர் ------
அ) பாரதியார்
ஆ) பாவேந்தர்
இ) பேரறிஞர்
ஈ) நாவலர்

13. திருவாசக, தேவாரப் பண்ணிசைப் பாக்களை நர்த்தகி பரதமாக்கி நிகழ்த்தியது -------
அ) அமெரிக்காவில்
ஆ) நார்வேயில்
இ) ஜப்பானிலுள்ள ஒசாகா நகரத்தில்
ஈ) சிங்கப்பூரில்

14. தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்
ஆ) கடல் + அலை – உயிர் + மெய்
இ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்
ஈ) மண் + வளம் – மெய் + மெய்

## பகுதி – II

### பிரிவு–1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
16. எப்போது மருந்து தேவையில்லை என்று வள்ளுவர் கூறுகிறார்?
17. திருச்சாழல் – குறிப்பு வரைக.
18. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

19. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. குருகுலக் கல்வி – விளக்குக.
21. ஆனந்தரங்கரின் வர்ணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு–3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.**

22. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 1. வித்தியாசம் 2. பாஸ்போர்ட்
23. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
24. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க. 1. அறிவில்லாதவன் 2. நஞ்சிருக்கு
26. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
   1. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான்.
   2. வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும்.
27. அடைப்புக் குறியில் உள்ளதுபோல் தொடர்களை மாற்றி எழுதுக.
   1. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை. (செய்தித் தொடராக்குக)
   2. குறவஞ்சி என்பது ஒருவகை நாடக இலக்கிய வடிவமாகும். (வினாத் தொடராக்குக.)
28. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
   அ) மதில்மேல் பூனை ஆ) எதிர்நீச்சல்
29. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக. 1. தண்டுடை 2. பொற்சிலம்பு
30. ஆக்கப்பெயர் விகுதிகளை எழுதிச் சான்று தருக.

## பகுதி – III

### பிரிவு–1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

www.Padasalai.Net

Scanned with CamScanner

32. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

33. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

34. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

பிரிவு–2

ஏவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

38. தாமரைகம் என்றால் என்ன?

பிரிவு–3

ஏவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

39. அ) சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பொதுவியல் திணை (அல்லது) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. பின்வரும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய மூன்றினை எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அதுவேண்டும்.

*– நாமக்கல் கவிஞர்*

42. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைக(ளு)
ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) ------.
2. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ------.
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) -----.
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்? (தாரி) ------.

43. தமிழாக்கம் தருக. akwaacademy.blogspot.com

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the fo of any other country. But what is special in these Tamil songs is, they not only possess Charm and the aroma of the soil but have preserved in them a certain literary an quality. This is so because the people who speak the language of these folk songs. Th have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old a full of life that they are always new and progressively modern. These songs were bor centuries ago;They are being born every generation; they will be born and reborn over again!

www.Padasalai.Net

Scanned with CamScanner

43.காது கேளாதவர்களுக்கான மாற்று வினா : பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு ஏற்ற விடை தருக.

தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் கால்டுவெல். தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர். தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் மறைமலையடிகள். தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் தேவநேயப் பாவாணர்.

தேவநேயப் பாவாணர், தெருவில் வந்து கொண்டிருந்த போது அவர் மீது மிதிவண்டி ஒன்று மோதியது. அதனால் அவருக்குக் கை, கால்களில் சிறுசிறு காயங்கள் ஏற்பட்டன. உடனே மிதிவண்டிக்காரர், "ஐயா, மன்னித்துக் கொள்க" என்றார். அதற்கு அவர், "மன்னிப்பு உருதுச் சொல்; பொறுத்துக்கொள்க எனத் தமிழில் சொல்லுங்கள்" எனக் கூறி, மிதிவண்டிக்காரரையும் சொல்லச் செய்தார் தேவநேயப் பாவாணர்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்; தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர் மூச்சாகக் கொண்டவர் பாவாணர், தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம்,வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், உயர்தரக் கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை முதலான நாற்பத்து மூன்று நூல்களைப் படைத்துள்ளார். மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார்.

வினாக்கள் :

1. தமிழ்மொழிக்குத் தொண்டாற்றியவர்கள் யாவர்?
2. தேவநேயப் பாவாணர் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டார்?
3. மிதிவண்டிக்காரர் கூறிய உருதுச்சொல் யாது? அதற்குத் தேவநேயப் பாவாணர் கூறிய தமிழ்ச்சொல் யாது?
4. பாவாணரது படைப்புகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கு விரிவான விடை தருக. 3x6=18

44.அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. (அல்லது)

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45.அ) இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன– கூற்றினை மெய்ப்பிக்க. (அல்லது)

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46.அ) "வாடிவாசல்" கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த தமிழகப் பண்பாட்டுக் கூறுகளை விளக்குக.

(அல்லது)

ஆ) சிம்போனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47.அ) "உடை அணிந்தேன்" – எனத் துவங்கும் தொலைந்து போனவர்கள் பாடல்.

ஆ) "செயின்" – என முடியும் குறள்

www.Padasalai.net

Scanned with CamScanner